# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2019 அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:-** **திரு.** A.W.சையத் முஸ்தபா கமால், B.Sc.,
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## கூட்ட பொருள்கள்

### பொருள் எண்-1

அரசாணை நிலை எண்.240, நிதி(ஊதியம்) துறை, நாள் 02.08.2019ல் அரசு மற்றும் உள்ளாட்சி பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம் ரூ.5000/– லிருந்து ரூ.10000/– ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

**( ந.க.எண். 4839 /2019/பி2 )**

### பொருள் எண்-2

கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரபிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த டம்பர் பிளேசர் வாகன எண்.TN32P3612 என்ற வாகனத்தினை இந்நகர் மன்ற தீர்மான எண்.23 நாள்:–28.05.2019 ல் மேற்கண்ட வாகனத்தினை 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட குடிநீர் டேங்கர் லாரியாக மாற்றம் செய்யவும்,இப்பணியை விழுப்புரம் TVS நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி விழுப்புரம் TVS நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொண்டு, மேற்படி நிறுவனத்திடமிருந்து ரூ.451945/- ம் செலவின பட்டியல் பெறப்பட்டுள்ளதை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2136 /2019 /எச்1)**

### பொருள் எண்-3

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான தினசரி நாளங்காடி கட்டண கழிப்பிடம் 01.04.2019 முதல் துறை ரீதியாக வசூலிக்கப்பட்டு வருவதால் 17.07.2019 முதல் 3 மாதத்திற்கு மின் கட்டணம் ரூ.8534/– யை செலுத்த கோரி மின்வாரிய துறையிடமிருந்து கடித எண்.483/2019, நாள் 15.10.2019ன் படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 5041 /2019 /எஇ1)**

### பொருள் எண்-4

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக சமுதாய கழிப்பிடங்கள் 27 , பொதுகழிப்பிடங்கள் 2 எண்ணிக்கையில் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்நகர்

மன்ற தீர்மான எண்.271 நாள்.28.05.2018ல் சமுதாய கழிப்பிடங்களை பராமரிக்க குறிஞ்சி மலர் மகளிர் சுய உதவி குழு மூலம் ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு நபர் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் 2018-2019 ம் ஆண்டிற்கு அனுமதி வழங்கப்பட்டு சமுதாய கழிவறைகளை பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது குறிஞ்சி மலர் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு ஜனவரி 2019 முதல் செப்டம்பர் 2019 மாதம் வரையில் நிலுவை ஊதியம் வழங்கிடவும், மேலும் 2019-2020 ஆம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய ஊதியத்தினை வழங்கிடவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, குறிஞ்சி மலர் மகளிர் சுயஉதவி குழு மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1323 / 2018 /எச்1)**

## பொருள் எண்-5

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் ஏற்கனவே டம்பர் பிளேசர் வாகனமாக பயன்படுத்தப்பட்டு வந்த வாகனம் எண்.TN 32 P 3612 தற்போது 6000 லிட்டர் கொள்ளளவுள்ள குடிநீர் லாரியாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குடிநீர் லாரியினை ஒரு நடைக்கு ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்)—க்கு (வண்டி வாடகை, குடிநீர், ஓட்டுநர் படி எரிபொருள் செலவு உட்பட) தனியாருக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2136 / 2019 / இ1 )**

## பொருள் எண்-6

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN320552 என்ற வாகனத்திற்கு புதியதாக பேட்டரி வழங்கும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் நகர்மன்ற தீர்மான எண்.411/2018 நாள்:-31.12.2018 ல் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் 18.10.2019 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | லட்சுமி பேட்டரி சர்வீஸ், கள்ளக்குறிச்சி | ஸ்ரீபிரியா பேட்டரி சர்வீஸ், கள்ளக்குறிச்சி | ஸ்ரீராம் பேட்டரி சர்வீஸ், கள்ளக்குறிச்சி |
|---|---|---|---|---|
| 1 | SF Sonic Trucker SK 1080 100R | **8650.00** | 9139.00 | 9000.00 |

அலுவலக குறிப்பு:-

1.மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. **லட்சுமி பேட்டரி சர்வீஸ், கள்ளக்குறிச்சி** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின முன்அனுமதி பெற்று பணிஉத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2.இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம்

அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3567 /2018/எச்1)**

**<u>பொருள் எண்-7</u>**

**வேலையின் பெயர்:-** கள்ளக்குறிச்சி நகராட்சியில் பகுதியில் உள்ள வார்டு எண்.01 முதல் 21 வரை உள்ள தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல் மற்றும் வெறிநாய்களுக்கு தடுப்பூசி போடும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் நகர்மன்ற தீர்மான எண். நாள்:-13.09.2019 ல் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளிகள் 20.09.2019 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | வாய்ஸ் பார் அனிமல்ஸ், சேர்டபிள் டிரஸ்ட், சென்னை | ஹேன்ட்ஸ் பார் அனிமல்ஸ், சென்னை | ஆர்ட் டு ஆர்ட் வெட் பவுண்ட்டேசன், சென்னை |
|---|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சியில் பகுதியில் உள்ள வார்டு எண்.01 முதல் 21 வரை உள்ள தெருநாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளுதல் மற்றும் வெறிநாய்களுக்கு தடுப்பூசி போடும் பணிக்கு (மருந்து செலவு, மருத்துவர் கட்டணம், நாய் பிடித்தல் மற்றும் பராமரிப்பு செலவு கட்டணம் உள்பட) | **700.00** | 725.00 | 750.00 |

**அலுவலக குறிப்பு:-**

**1.**மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. **வாய்ஸ் பார் அனிமல்ஸ்,சேர்டபிள் டிரஸ்ட், சென்னை** என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின முன்அனுமதி பெற்று பணிஉத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2.**இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4120 /2019/எச்1)**

**<u>பொருள் எண்-8</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 04, க.மாமனந்தல் பெரிய ஏரியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-2019ன் கீழ், ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட திறந்தவெளி கிணறு அமைக்கப்பட்டது. மேற்படி கிணற்றில் உள்ள நீரினை கேசவலு நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீரேற்றம் செய்யப்பட்டு, அந்த பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் தங்கு தடையின்றி செய்யப்பட்டு வருகிறது. மேற்படி, திறந்தவெளி கிணற்றுக்கு மேல் மூடி இல்லாமல் உள்ளதால், அசம்பாவிதங்கள் ஏதேனும் நிகழா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மேற்படி திறந்தவெளி கிணற்றுக்கு இரும்பிலான மேல் மூடி அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்படி திறந்தவெளி கிணற்றுக்கு புதியதாக மேல் மூடி அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர, அவசியத்தினை கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை

மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 5249 / 2019 / இ1 )**

**<u>பொருள் எண்-9</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட கள்ளக்குறிச்சி பகுதியில் கிராம புல எண். 161/1, 161/2, 4, 5, 163/6pt, 163/8, 163/9pt, 163/11, 163/12, 163/13pt அமைந்துள்ள அனுமதியற்ற லட்சுமண கவுண்டர் நகர் மனைப்பிரிவில் உள்ள 70 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண்.78 மற்றும் 172ன் படி க.எண். 1537/2019/விம. நாள். 26.08.2019ல் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ(வி.ம) எண். ஆர். 699/2019 என எண்ணிடப்பட்ட மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைபடுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைபடுத்தி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். எப்1/4189/2019

**<u>பொருள் எண்-10</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட கிராம புல எண். 73/2-ல் அமைந்துள்ள அனுமதியற்ற ஸ்ரீதெய்வானை கண்ணன் நகர் மனைப்பிரிவில் உள்ள 33 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண்.78 மற்றும் 172ன் படி க.எண். 5948/2018/விம நாள். 23.01.2019ல் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ(வி.ம) எண். ஆர்.149/2019 என எண்ணிடப்பட்ட மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கொள்கையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு வரன்முறைபடுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைபடுத்தி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். எப்1/636/2019

**<u>பொருள் எண்-11</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி 15.87 ச.கி.மீ. பரப்பளவில் 21 வார்டுகளை உள்ளடக்கி 09.08.2010 முதல், முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 52,507 ஆகும். மேலும், இந்நகராட்சிக்குச் சொந்தமான சாலைகளின் மொத்தம் நீளம் 71.023 கி.மீ., தேசிய நெடுஞ்சாலை (NH) மற்றும் மாநில நெடுஞ்சாலைகளின் (SH) நீளம் 8.800 கி.மீ. ஆக மொத்தம் 79.823 கி.மீ. ஆக உள்ளது.

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் மொத்தம் 1901 தெருமின் விளக்குகள் கீழ்க்காணும் விபரப்படி பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

| வ. எண் | விளக்குகள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 40 வாட்ஸ் குழல் விளக்கு | 1061 |
| 2. | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | 462 |
| 3. | மின் சிக்கன சேமிப்பு விளக்கு (36W) | 373 |
| 5. | உயர் கோபுர மின் விளக்கு | 5 |
| **மொத்தம்** | | **1901** |

மேற்படி அனைத்து தெரு மின் விளக்குகளையும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, 2019-2020 ஆம் ஆண்டிற்கு ரூ. 9,00,000/-க்கு, தீர்மானம் எண். 28 நாள். 28.05.2019ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி தேவையான மின் விளக்குகள் மற்றும் அதற்குண்டான உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி தெருமின் விளக்கு உபகரணங்கள் முடிவுறும் தருவாயில் உள்ளதால், தற்போது மின் விளக்கு உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கும், இதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ. 9,90,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)—க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தெருமின் விளக்கு பணியின் அவசர, அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 5246 / 2019 / இ1 )**

## <u>பொருள் எண்-12</u>

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும், குடிநீர் தட்டுப்பாடு காரணமாக குடிநீர் வழங்குவதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டும், ஏற்கனவே உள்ள கைப்பம்புகள் / மின் மோட்டார்கள் பல இடங்களில் பழுது ஏற்பட்டு இயங்காமல் இருக்கும் பட்சத்தில், அதனை இயங்குவதற்கு தேவையான அனைத்து குடிநீர் உபகரணங்களையும் இருப்பு வைத்துக்கொள்ளவும், மாவட்ட கொள்முதல் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான "M/s. FLOWIN INDUSTRIES, Erode" என்ற நிறுவனத்தாரிடம், மாவட்ட கொள்முதல் குழு / குடிநீர் வடிகால் வாரிய விலையில் நேரடியாக குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ள திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க. ஆ8/973/2019 நாள். 14.09.2019-ல் அறிவுறுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இந்நகராட்சி தீர்மானம் எண். 99 நாள். 20.09.2019ல் ரூ. 9,90,000/-க்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டது.

இந்நகராட்சியில் தற்போது குடிநீர் தங்கு தடையின்றி வழங்குவதற்கும், நகரில் பழுதடைந்துள்ள மின் மோட்டார்களையும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கும், தற்போது கூடுதலாக குடிநீர் விநியோக உபகரணங்களை மேற்படி சுற்றறிக்கைக்கிணங்க கொள்முதல் செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ. 9,90,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்)—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மாவட்ட கொள்முதல் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட M/s. FLOWIN INDUSTRIES, Erode என்ற நிறுவனத்தாருக்கு நேரடியாக பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர, அவசியத்தினை கருதி, தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

4. தொகையினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 4395 / 2019 / இ1 )**

**பொருள் எண்-13**

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் 24552/2019ன் படி திரு. R. செந்தமிழ்செல்வன் துப்புரவு பணியாளர் என்பவர் 15.5.1998ல் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த நிலையில் 01.03.2006 முதல் ஊதிய ஏற்ற முறையில் கொண்டுவரப்பட்டுள்ளது. 15.5.1998 முதல் 28.2.2006 வரை உள்ள காலத்திற்கு நிலுவைத் தொகை வழங்க கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கறிஞர் இந்நகராட்சி சார்பாக திரு. V. ஜெயபிரகாஷ் நாராயணன் அரசு வழக்கறிஞர் (கூடுதல் பொறுப்பு) அவர்களின் வழியிலேயே வழக்கினை நடத்துவதற்கு வழக்கு கட்டணம் ரூ.15,000/– வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வழக்கு கட்டணம் ரூ.15,000/–யை நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**( ந.க.எண். /2019/சி1 )**

**பொருள் எண்-14**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் நவீன எரிவாயு தகனமேடையில் பிரேதங்களை எரியூட்டும் பராமரிப்பு பணிகள் M.H.T Engineering என்ற நிறுவனத்தின் மூலம் கடந்த 01.01.2019 முதல் காலநீடிப்பு செய்யப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பராமரிப்பு பணிகளுக்கு மாதம் ரூ.46,000/– யும் ஒரு பிரேதம் எரிக்க ரூ.1000/– வீதம் வழங்கப்பட்டு வரும் நிலையில் தற்போது 20.05.2019 முதல் 31.12.2019 வரை ஆகும் உத்தேச செலவினம் ரூ.8,00,000/– (எட்டு இலட்சம்)க்கு நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 20.05.2019 முதல் 31.12.2019 வரை உள்ள காலத்துக்கு பராமரிப்பு பணிகளுக்கு பெறப்பட்டும் பட்டியல் படி தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். /2019/சி1 )**

**பொருள் எண்-15**

தமிழக மாண்புமிகு முதலமைச்சர் சிறப்பு குறைதீர்ப்பு திட்டத்தினை அனைத்து மாவட்டத்திலும் செயல்படுத்த ஏதுவாக 22.08.2019 முதல் 31.8.2019 வரையிலான காலங்களுக்கு துறைவாரியாக அலுவலர்களை ஒருங்கிணைத்து குழு அமைத்து மனுக்கள் பெறவும். அது தொடர்பான விளம்பரத்தினை பொது மக்கள் அறியும் வண்ணம் ஆட்டோ வாகனம் வைத்து நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளிலும் அறிவிப்பு செய்யவும் குறைதீர்வு முகாமிற்கு வந்து செல்லும் பொது மக்களுக்கு குடிநீர் வசதி, நாற்காலி போன்ற வசதிகளை செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/– (இருபதாயிரம் மட்டும்)க்கு நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் விழுப்புரம் அவர்களின் கடிதத்தினை பார்வையிட்டு

அதில் உள்ள நிபந்தனைகளின் படி பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. குறைதீர்வுக்கு முகாம் அலுவலகம் வரை செல்லும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் ஆட்டோ விளம்பரம் ஆகும் செலவினத்தினை அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. மேற்படி செலவினம் அனைத்தும் திரு. எம், செந்தில்குமார், இளநிலை உதவியாளர் என்பவர் மூலம் செலவினங்கள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை பட்டியல்படி தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். /2019/சி1 )**

**<u>பொருள் எண்-16</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆண்டு குத்தகை இனங்கள் 27.02.2018ல் பொது ஏலம் கோரப்பட்டதில் இந்நகராட்சி மன்ற தீர்மான எண்.208/2018, நாள் 28.02.2018 தேதியில் ஒப்புதல் படி ஆண்டு குத்தகைதாரர்களுக்கு உயர்ந்தபட்ச ஏலதாரர்களுக்கு குத்தகை உரிமம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. அதன்படி 2018–2019 முதல் 2020–2021 உள்ள மூன்று ஆண்டுகளுக்கு குத்தகையினை அனுபவித்துக்கொள்ளவும் ஒவ்வொரு நிதியாண்டிற்கு புதுப்பித்துக்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்க்கண்ட உரிமைதாரர்கள் 2018–2019 ம் ஆண்டுக்கான உயர்ந்தபட்ச ஏலத் தொகையினை செலுத்ததால் இரண்டு குத்தகைதாரர்களின் உரிமையை 2019–2020ம் ஆண்டுக்கு நீக்கம் செய்து மேற்கண்ட இரண்டு இனங்களையும் துறை மூலம் வசூலிக்கவும் அதற்கு தேவையான இரசீது புத்தகங்களை அரசு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்தின் மூலம் வாங்கி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/–க்கு நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | உரிமைதாரர் பெயர் | நிலுவைத்தொகை | வருமானவரி | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கே.முருகேசன், சாலையோர சுங்கம் | 25,05,000/– | 55050/– | 25,60,050/– |
| 2 | எம்.பாஸ்கர், நாளங்காடி கழிப்பிடம் | 1,60,000/– | 3100/– | 1,63,100/– |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 2018–2019ம் ஆண்டுக்கான உரிமைதாரர்கள் நாளது தேதிவரை செலுத்ததால் அவர்களின் உரிமையினை இரத்து செய்து துறைமூலம் வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. துறை மூலம் வசூலிக்க தேவையான ரசீது புத்தகங்கள் அடித்து கொள்ளவும் அதற்கான செலவினங்கள் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. தனி அலுவலரின் அவரச அவசியம் கருதி தமிழ்நாடு மல்டிபர்ப்பஸ் இன்கோ சர்வ், திருச்சி என்ற நிறுவனத்தால் அச்சடித்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிகலாம்.

**( ந.க.எண். /2019/அ2 )**